
CHAMBRE DE COMMERCE PONDICHERRY
SERVICE & INTEGRITY
Founded 13-02-1849

வர்த்தக சபை

# செய்தி வெளியீடு

புதுச்சேரி.

வெளியீடு : 8 ஜனவரி - மார்ச் : 2013



## தலைவரிடமிருந்து.......

அன்பார்ந்த உறுப்பினர்களே !

வர்த்தக சபையின் எட்டாம் காலாண்டிதழின் வழியே உங்களை சந்திப்பதற்கு மீண்டும் ஓர் வாய்ப்பினை எனக்கு அளித்துள்ள உறுப்பினர்களாகிய உங்கள் அனைவருக்கும், மேலும் என்னோடு கடந்த நிர்வாகக்குழுவில் பணியாற்றிய நிர்வாகிகள் மற்றும் குழு உறுப்பினர்கள், மேலும் என்னோடு இணைந்து பணியாற்ற உள்ள நிர்வாகிகள் மற்றும் குழு உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த காலாண்டில் பல பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம் குறிப்பாக புதுச்சேரி வர்த்தக மையம் அமைக்கப்பட புதுச்சேரி அரசை அணுகி பல நடவடிக்கைகளை எடுத்து அவைகளில் முன்னேற்றம் கண்டுள்ளோம். கடந்த 17-02-2013, அன்று நடைபெற்ற பொதுக்குழுக்கூட்டத்தில் உயர்த்தப்பட்ட மதிப்பு கூட்டு வரியை குறைப்பதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டது. கடந்த 05-01-2012, அன்று மாண்புமிகு. முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து மனு அளித்தோம். 10-03-2012 அன்று அனைத்து வணிகம் மற்றும் தொழில் சங்கங்களின் கூட்டு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 14-03-2012 அன்று மாண்புமிகு. முதல்வர் அவர்களை சந்தித்தோம். நிதிநிலை அறிக்கையில் அறிவிக்க வலியுறுத்தி 16-03-2012 மனு அளித்தோம். வரிகுறைப்பு அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் இடம் பெறாததால், மீண்டும் அனைத்து வணிகம் மற்றும் தொழில் சங்களின் கூட்டுக்கூட்ட முடிவின்படி 24-07-2012 காலை முதல் 25-07-2012 காலை வரை 24 மணி நேர கடை அடைப்பு நடத்தப்பட்டது மேலும் கடந்த 06-09-2012 அன்று புதுச்சேரி அரசின் நிதித்துறை செயலர் அவர்களையும் 10-09-2012 அன்று புதுச்சேரி அரசின் தலைமைச் செயலாளர் அவர்களையும் நேரில் சந்தித்து மனு அளித்தோம். மேலும் வர்த்தக மையம் கட்டுவது, சில்லரை வணிகத்தில் அந்நிய முதலீடு குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களை சந்திக்கும் போதெல்லாம் இது குறித்து தொடர்ச்சியாக வலியுறுத்தி உள்ளோம். 23-03-2013 அன்று வர்த்தக சபையின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களுடன் சென்று கோரிக்கை மனு அளித்தோம். மேலும் 25-03-2013 அன்று அனைத்து வணிகர்கள் மற்றும் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளோடு சென்று சந்தித்து மனு அளித்துள்ளோம் அவரும் ஆவன செய்வதாக உறுதி கூறியுள்ளார்.

சில உறுப்பினர்கள் ஜனநாயகம் பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஜனநாயகம் என்பது அனைவரும் சமம். ஒரு உறுப்பினர் நிர்வாக குழு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் அவரை இரண்டாவது முறை தலைவராகவோ, இதர பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கப்படுவது நிர்வாக குழு உறுப்பினர்களின் அதிகாரத்திற்கும் விருப்பத்திற்கும் உட்பட்டது. அவர்கள் யாரை வேண்டுமானாலும் நிர்வாக பொறுப்பாளராக தேர்ந்தெடுக்க உரிமையுண்டு. இதனை சட்டத்தின் மூலம் தடை செய்வது எவ்விதத்திலும் சரியானது அல்ல. இந்திய அரசியல் சாசனம், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1956, ஒரு சட்டமன்ற உறுப்பினரை எத்தனை முறை வேண்டுமானாலும் முதல் அமைச்சராக தேர்வு செய்யலாம். உதாரணமாக மேற்கு வங்கத்தில் திரு. ஜோதிபாசு 26 ஆண்டுகளாக தொடர்ந்து அம்மாநில முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த சட்டதிருத்தம் செய்யப்படவில்லை. அதுபோல் ஒரு மக்களவை உறுப்பினர் எத்தனை முறை வேண்டுமானாலும் பிரதமர் ஆகலாம். உதாரனமாக அவர்கள் தற்போதைய பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன்சிங் 10 ஆண்டுகளாக தொடர்ந்து பிரதமர் பதவி வகிப்பதை எந்த சட்டமும் தடை செய்யவில்லை.

இதுதவிர பல வர்த்தக சபைகளின் தலைவர்களாக பலர் தொடர்ந்து பதவி வகித்து வருகின்றனர். உதாரணமாக திரு. ரத்தின வேலு 26 ஆண்டுகளாக தொடர்ந்து மதுரை வர்த்தக சபையின் தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நிறைவாக, புதுவை மாநிலத்திற்கும் நமது வர்த்தக சபைக்கும் பெருமை தரும்படி வர்த்தக மையம் அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இத்திட்டத்தினை சீர் குலைக்கும் விதமாக சில உறுப்பினர்களும், வாடகைதாரர்களும் தங்களது சுயநலத்திற்காக செயல்படுவது மிக்க வருத்தத்தையும் வேதனையும் அளிக்கின்றது. "தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும்" என்பது கீதையின் வாக்கு. எனவே, சம்மந்தப்பட்டவர்கள் தங்கள் மனதை மாற்றிக்கொண்டு வர்த்தக மையம் திட்டம் வெற்றி பெற ஒத்துழைக்குமாறு இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம் !

நன்றி ! வணக்கம்

அன்புடன்.

**கே.ஏ. செண்பகராஜன்,** தலைவர்


AMARA RAJA
Gotta be a better way
Johnson Controls
AMARON
PIT STOP
AMARON 2 Wheeler Batteries
48/60 months Warranty
AMARON 4 Wheeler Batteries
12 / 18 / 24 / 36 / 48 / 60
months Warranty
AMARON Current Batteries
24 months Warranty
AMARON Home UPS
24 months Warranty
AMARON Tubular Batteries
36, 48 months Warranty
VICAMP AUTO POWER PVT. LTD.
Principle Franchisee's for Chennai South, South Arcot & Pondicherry
51, 100 Ft Road (N.R. Congress Office Building) Ellaipillaichavady, Pondy-605 005.
Ph : 2205999, 4208999, Fax : 0413-2205999
Mobile : 9790920 222, Personal No. : 9894444 333
Website : www.vicampgroup.in email : pondy@vicampgroup.in

# இதர நிகழ்வுகள்....

புதுச்சேரி மாநிலத்தில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொண்டு, ஞாயிறு உள்ளிட்ட ஆண்டின் அனைத்து விடுமுறை நாட்களிலும் கடைகள், வணிக நிறுவனங்களை திறந்து வணிகம் செய்ய நடவடிக்கை எடுக்கக்கோரி தொழிலாளர்துறை செயலர், புதுச்சேரி அவர்களுக்கு 3-1-2013 மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரி வணிகத்தின் முக்கிய பகுதிகளான நேருவீதி, காந்தி வீதி, உள்ளிட்ட முக்கிய வீதிகளில் குழிகள், பள்ளங்கள் தோண்டப்பட்டு, மூடப்படாமலும், சரியாக பராமரிக்கப்படாமலும் உள்ளதால் அதனை சரிசெய்து மக்கள் சென்று வர வழி ஏற்படுத்தி தரவேண்டுமென வலியுறுத்தி தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை அவர்களுக்கு 3-1-2013, அன்று மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரி, மேட்டுப்பாளையம் தொழிற் பேட்டையில் உள்ள சாலைகள். கழிவு நீர் வாய்க்கால்கள், குடிநீர் குழாய்கள், சேதமடைந்தும், பழதடைந்தும் உள்ளதால் அங்கு தொழிற்சாலை அமைத்து தொழில்புரியும் தொழிற்சாலை உரிமையாளர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பல இடையூறுகளை சந்தித்து வருவது வர்த்தக சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதனை ஏற்று மேட்டுப்பாளையம் தொழிற்ப்பேட்டையை உடனடியாக சரி செய்யக்கோரி தொழில் வணிகத்துறை செயலர், புதுச்சேரி அவர்களுக்கு 8-1-2013 அன்று கடிதம் அளிக்கப்பட்டது.

புதுச்சேரி வணிகவரித்துறைக்கு, ரிட்டர்ன் தாக்கல் செய்வது மற்றும் வணிக வரி செலுத்துவது குறித்து 11-01-2013 அன்று கடிதம் எழுதப்பட்டது.

வர்த்தக சபை அமைக்க உள்ள புதுச்சேரி வர்த்தக மையம் அமைய, M/s. ஹானஸ்டி இஞ்சினியர்ஸ் கான்டிராக்டர்ஸ் நிறுவனம் ஒப்படைப்பதாக உறுதியளித்து தற்போது ஒப்படைக்காமல் உள்ள குடோன் எண். 7 ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மேதகு. துணைநிலை ஆளுநர் அவர்களுக்கு 12-01-2013 அன்று விரிவான மனு அளிக்கப்பட்டது.

நமது வர்த்தக சபையில் ஆயுட்கால உறுப்பினராக உள்ள M/s. அன்பு டிரேடர்ஸ் நிறுவனத்தை மாமுல் கேட்டு சில சமூக விரோத சக்திகள் கடந்த 16-01-2013 அன்று இரவு கடுமையாக தாக்கப்பட்டு, சேதத்திற்குள்ளான செய்தி அறிந்த உடன், நமது வர்த்தக சபையின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட நமது நிர்வாகிகள் நேரில் சென்று கடையினை பார்வையிட்டனர். அதன் பின்னர் வர்த்தக சபையில் ஒன்று கூடி பல உறுப்பினர்களுடன், புதுச்சேரி மாநில காவல்துறைத் தலைவர் அவர்களை 17-1-13 அன்று நேரில் சந்தித்து, இது போன்ற தாக்குதல்கள் நேரா வண்ணம் உரிய நடவடிக்கை எடுத்து வணிகர்களையும், அவர்களது நிறுவனங்களையும் காக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மனு அளிக்கப்பட்டது. நமது மனுவினை பெற்றுக் கொண்ட காவல்துறைத்தலைவர் அவர்களும், விரைந்து நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளை கைது செய்வோம் என்றும் அனைத்து வணிகர்கள், அவர்களின் நிறுவனங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும், என்றும், சமூக விரோத சக்திகள் கடும் நடவடிக்கையால் ஒடுக்கப்படுவார்கள் என்று உறுதியளித்தார்.

வர்த்தக சபை அமைக்க உள்ள புதுச்சேரி வர்த்தக மையம் தொடர்பாக ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடம் மேம்படுத்தப்பட்டு சில திருத்தங்களை மேற்கொண்டு புதிய மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டு, அது புதுச்சேரி சுற்றுலாத்துறை, இயக்குனர், ஏ.கே. கண்ணா, மூத்தப் பொதுமேலாளர் , இந்திய வணிக மேம்பாட்டுக்கழகம் (ITPO), நியூடெல்லி, ஆகிய இருவருக்கும் மேல் நடவடிக்கைகாக 30-01-2013 அனுப்பி வைக்கப்பட்டது.

வர்த்தக சபைக்கு சொந்தமான, சுப்பையா சாலையிலுள்ள சொத்துக்களை சட்ட விரோதமாக பதிவு செய்து, அதனை அபகரிக்க முயலும், ஓர் கூட்டத்தின் மீது குற்றவியல் சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி 07-02-2013, அன்று மேதகு. துணைநிலை ஆளுநர் அவர்களுக்கு மனு அளிக்கப்பட்டது. நமது வர்த்தக சபைக்கு சொந்தமான சுப்பையா சாலையிலுள்ள குடோன் எண். 3,5, மற்றும் 6-ன் மேற்கூரையிலுள்ள மரஓடுகள் 2013 அன்று தினத்தந்தி நாளிதழில் சீலிட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல அறிவிப்பினை வரவேற்று விளம்பரம் செய்யப்பட்டது.

இந்த விளம்பரத்தினை கண்ட 135 நபர்கள் ரூ. 100 செலுத்தி டெண்டர் பற்றிய அறிக்கையினை பெற்று சென்றனர். இவர்களில் 72 நபர்கள் தலா ரூ. 5,000/- டேவனித்தொகை செலுத்தினர். அவர்களில் 19 நபர்கள் ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை. மீதமுள்ள 53 நபர்கள் மட்டும் டெண்டரில் பங்கேற்றனர்.

## 2013-2014-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (துறைவாரியாக)

| | பட்ஜெட் மதிப்பீடு 2012 - 2013 ரூ. கோடிகளில் | திருத்தப்பட்ட மதிப்பீடு 2012 - 2013 ரூ. கோடிகளில் | பட்ஜெட் மதிப்பீடு 2013 - 2014 ரூ. கோடிகளில் |
|---|---|---|---|
| மொத்தம் | 6,51,509 | 5,56,176 | 6,80,123 |
| விவசாயம் | 16,121 | 13,787 | 17,095 |
| விமானப் போக்குவரத்து | 7,293 | 9,288 | 8,865 |
| தகவல் தொடர்பு மற்றும் ஐ.டி. | 21,394 | 11,248 | 16,783 |
| சுற்றுச்சூழல் மற்றும் வனம் | 2,493 | 1,800 | 2,430 |
| வெளியுறவுத் துறை | 1,500 | 1,620 | 3,000 |
| சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் | 30,477 | 24,894 | 32,745 |
| உள்துறை | 10,500 | 6,828 | 10,500 |
| மனித வள மேம்பாடு | 61,427 | 56,223 | 65,869 |
| பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு | 79,728 | 76,850 | 79,052 |
| மின்துறை | 62,425 | 54,696 | 59,329 |
| கிராமப்புற மேம்பாடு | 76,376 | 55,000 | 80,194 |
| அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் | 5,975 | 5,030 | 6,275 |

18-01-2013 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வந்திருந்த டெண்டர் கொடுத்தவர்கள் முன்னிலையில் டெண்டர்கள் பிரித்து வாசிக்கப்பட்டது. அதிகப்படியான விலையாக ரூ. 5.00 லட்சத்திற்கு திரு. S. ஜான்பாட்ஷா டெண்டர் சமர்பித்திருந்தார். இத்தொகையானது வர்த்தக சபையின் எதிர்பார்ப்பிறகு மிக குறைவாக உள்ளதால், பகிரங்க ஏலம் விடப்பட்டது. வர்த்தக சபையின் சார்பாக upset price அடிப்படை தொகையாக ரூ. 5.00 லட்சத்தில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக உயர்ந்து அதிகப்படியாக ரூ. 12,55,000/-க்கு திரு. V.ராஜா அவர்கள் P.R. Wooden Furnitures, B-187,100 Feet Road, Mudaliarpet, Puducherry - 605 004. கொடுப்பதாக கூறினார். அ/தற்குமேல் வேறு எவரும் ஏலம் எடுக்கக் முன்வராததால், இந்நிகழ்ச்சிற்கு வந்திருந்த திரு. K.A. செண்பகராஜன், தலைவர், திரு. ப. ராஜேந்திரன், துணைத்தலைவர் திரு. சு.குணசேகரன், பொதுச் செயலாளர், திரு. க. முகம்மது சிராஜ், இணைப் பொதுச்செயலாளர், திரு. ச. தண்டபாணி (எ) ராஜா, பொருளாளர் மற்றும் திரு. மு.சிவசங்கர் முன்னாள் தலைவர், நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு. ஜெ. சேகர், திரு. எல்.பி. ரவி, ஆகியோரின் சம்மதம் பெற்று இத்தொகைக்கு ஏலம் விட்டு முடிக்கப்பட்டது.

இந்த டெண்டர் மற்றும் ஏல நிகழ்ச்சியினை திரு. ப. தணிகாசலம், நிர்வாக குழு உறுப்பினர் அவர்கள் முன்னிருந்து நடத்தினர். உடன் திரு. க. சுதாகர், நிர்வாக குழு உறுப்பினர் அவர்களும் பங்கு பெற்று சிறப்புடன், எவ்வித குறைபாடியின்றி நடத்தி தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய திருநாட்டின் குடியரசு தினவிழா நாடு முழுவதும் எழுச்சியோடும், சிறப்போடும் கொண்டாடப்படுகிறது. புதுச்சேரியில், வர்த்தக சபை சார்பாக ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அதன் தொடர்ச்சியாய் இந்த ஆண்டும் நமது நாட்டின் குடியரசு தினவிழா வர்த்தக சபையில் கொண்டாடப்பட்டது. வர்த்தக சபை அலுவலகத்தில் காலை 8.00 மணிக்கு தலைவர் திரு.கே.ஏ.செண்பகராஜன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து இனிப்புகளை வழங்கினார். அதன்பின்னர் நாட்டுப்பண் பாடப்பட்டு விழா நிறைவடைந்தது. விழாவில் துணைத்தலைவர், ப. ராஜேந்திரன், பொதுச் செயலாளர் சு. குணசேகரன், பொருளாளர், ச.தண்டபாணி (எ) ராஜா, முன்னாள் தலைவர், திரு.மு.சிவசங்கர், நிர்வாக குழு உறுப்பினர்கள், ப. தணிகாசலம், சி. உதயகுமார், கெ. சேகர், க. சுதாகர், க. வெங்கடேசன், அலுவலக செயலாளர் ப.நா. பத்மநாபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வருகை தந்த அனைவருக்கும் பொதுச்செயலாளர் சு. குணசேகரன் அவர்கள் நன்றி கூறினார்.

28-01-2013 அன்று நடைபெற நிர்வாகக் குழு கூட்டத்தில், 31-12-2012 தேதியிட்டு, புதுச்சேரி பாரதி வீதியிலுள்ள M/s. சாய்ராம்ஸ் நிறுவனம் ஆண்டு சந்தா (Annual Member) உறுப்பினராக சேர கொடுத்திருந்த மனுவினை பரிசீலனை செய்து உறுப்பினராக சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

M/s. சித்தி வினாயகர் & கோ, நேரு வீதி, 06-02-2013 தேதியிட்டு ஆயுட்கால உறுப்பினராக சேர கொடுத்திருந்த விண்ணப்ப மனு பரிசீலனை செய்யப்பட்டு மேற்படி

## சரக்கு மற்றும் சேவை வரி (GST)

சரக்கு மற்றும் சேவை வரியை (Goods and Service Tax - GST) அமல்படுத்தினால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் மத்திய விற்பனை வரி வருவாய் இழப்பை ஈடு செய்வதற்கு முதல் கட்டமாக ரூ. 9.000 கோடி ஒதுக்கப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வரி விதிப்பு மூலம் மத்திய விற்பனை வரி (CST) முறை கைவிடப்படும். இதனால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் ரூ. 34.000 கோடி வருவாய் இழப்பை ஈடு செய்ய மத்திய அரசு ஒப்புக் கொண்டது.

இதன்படி 2010 - 2011 ஆம் நிதியாண்டுக்கான இழப்பை 100 சதவீதமும், 2011 - 2012 மற்றும் 2012 - 2013 ஆம் நிதியாண்டுகளுக்கான இழப்பீட்டில் முறையே 75 சதவீதம் மற்றும் 50 சதவீதம் என இழப்பீடு தரப்படும்.

மாநில அரசுகளுக்கு இடையிலான பொருட்கள் பரிமாற்றத்துக்கு விதிக்குப்படும் வரியே CST. இது 2007 - 2008-ஆம் நிதியாண்டில் 4-லிருந்த 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 2008-2009ஆம் நிதியாண்டில் மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்ட பிறகு CST 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 2010 ஏப்ரல் மாதத்திலேயே GST முறையை அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டது. எனினும் மாநில அரசுகளுடன் கருத்தொற்றுமை ஏற்படாததால் தொடர்ந்து பலமுறை ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எனினும் GST-யை அமல்படுத்துவது தொடர்பாக இதுவரை உடன்பாடு எட்டப்படவில்லை. மாநில அரசுகளுடன் மத்திய அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஒரு சில மாதங்களில் ஒருமித்த கருத்து ஏற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தினை ஆயுட்கால உறுப்பினராக சேர்த்துக் கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

17-02-2013 அன்று நமது வர்த்தக சபையின் பொதுக்குழு கூட்டம் ஒட்டல் ஆனந்தா இன் கன்வென்ஷன் சென்டரில் இனிதே நடைபெற்றது. பொதுக்குழுவில் உறுப்பினர்கள் கலந்துரையாடலின்போது பல ஆலோசனைகளையும், கருத்துகளையும் கூறியபின் இரண்டு விதிதிருத்தம், நிறைவேற்றப்பட்டு, 2011-2012 ஆண்டு ஆண்டறிக்கையும் வாசித்து பதிவு செய்யப்பட்டது

18-02-2013 முதல் 22-02-2013 வரை 5 நாட்களுக்கு தொழிலாளர் துறையினரால் புதுச்சேரி கடைகள் மற்றும் வணிக நிறுவனச்சட்டம் 1964 மற்றும் அதன் விதிமுறைகள் மோட்டார் வாகன, தொழிலாளர் சட்டம் 1964 ஆகியவைகளின் அடிப்படையில் பதிவு செய்து கொள்வதற்கு வசதியாக சிறப்பு முகாம் நடைபெற்றது. வர்த்தக சபை உறுப்பினர்களும், உறுப்பினர்கள் அல்லாத நூற்றுக்கணக்கான வணிகப் பெருமக்களும், அதிக அளவில் பயனடைந்தனர். மேலும் புதுச்சேரி கடைகள் மற்றும் வணிக நிறுவனச்சட்டம் 1964 மற்றும் அதன் விதிமுறைகள் மோட்டார் வாகன, தொழிலாளர் சட்டம் 1964 குறித்து விழிப்புணர்வு எற்படுத்தி தந்தது குறிப்பிடத்தக்கது.

28-02-2013 ஆம் நாள் நடைப்பெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தில் 1. ஸ்ரீ அம்பாள் ஜெராக்ஸ், 2. ஸ்ரீ ரமணா ஏஜென்சீஸ், மற்றும் 3. ஜீவிகா கம்யூனிக்கேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி ஆகியோர்கள் நமது வர்த்தக சபையில் ஆண்டு சந்தா உறுப்பினர்களாக சேர கொடுத்த மனுக்களை பரிசீலனை செய்து அவர்களை ஆண்டு சந்தா உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

கடந்த 06-11-2012 அன்று மாண்புமிகு. திரு. ரெயில்வே இணை அமைச்சர் அதிர்ரஞ்சன் சவுத்ரி அவர்கள் புதுவையிலிருந்து மும்பைக்கு புதிய ரெயில் தொடக்க விழாவிற்கு வருகை தந்தபோது, புதுவையிலிருந்து தென்மாநிலங்களுக்கு குறிப்பாக மதுரை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற திருத்தலங்களுக்கு ரெயில் வசதி ஏற்படுத்தி தர வேண்டுமென வர்த்தக சபை சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பெற்றது.

மேற்படி நமது வேண்டுகோளை ஏற்று 2013-2014 ஆம் ஆண்டு ரெயில்வே பட்ஜெட்டில் இதற்கான அறிவிப்பு வெளியிட காரணமாயிருந்த மத்திய இணை அமைச்சர். திரு. வே. நாராயணசாமி அவர்கட்கு வர்த்தக சபை சார்பாகவும் மாண்புமிகு. ரெயில்வே இணை அமைச்சர் அவர்களுக்கும் நமது இதயங்கனிந்த நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், வர்த்தக சபையின் "வர்த்தக மையம்" கட்டுவதற்கான ஆயத்த பணிகளை செய்து வருகிறோம். 26-12-2012 அன்று வரைபடத்தினை புதுச்சேரி நகர அமைப்பு குழுமத்திடம் சமர்ப்பித்துள்ளோம். இந்நிலையில் மாண்புமிகு சுற்றுலாஅமைச்சர் அவர்கள் சுற்றுலா வளர்ச்சி நிதி ரூ. 120 கோடியிலிருந்து இந்த வர்த்தக மையம் கட்டுவதற்கு தேவைப்படும் நிதியினை வழங்கிட வேண்டுமாய் இந்நேரத்தில் கோரிக்கையினை வைக்கிறோம்.

புதுவையில் சுமார் 30,000 கடைகள் மற்றும் நிறுவனங்கள் செயல்படுவதாகவும் அதில் 10,000 கடைகள் மற்றும் நிறுவனம் மட்டுமே பதிவு செய்துள்ளதாக அறிகிறோம். எனவே, பதிவு செய்தவர்கள் அனைவரும் கால தாமதம் செய்யாமல் பதிவு செய்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## ரயில்வே பட்ஜெட் 2013-2014

சரக்கு கட்டணம் 5.8 சதவீதமாக உயர்வு

முன்பதிவு மற்றும் தட்கல் கட்டணம் உயர்வு

பயணிகள் கட்டணம், லக்கேஜ் மற்றும் பார்சல் கட்டணம் உயரவில்லை

2013 - 2014 ஆம் நிதியாண்டில் அதிக பட்சமாக ரயில்வே திட்டங்களுக்கு ரூ. 63,363 கோடி ஒதுக்கீடு.

67 புதிய எக்ஸ்பிரஸ் இரயில்கள், 26 பாசஞ்சர் இரயில்கள், 13 மின்சார ரெயில்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

எரிபொருள் விலையைப்பொறுத்து சரக்குக்கட்டணம் ஏப்ரல் முதல் மாற்றி அமைக்கப்படும்.

### புதிய ரயில் சேவைகள்

புதுச்சேரி - கன்னியாகுமரி (வாராந்திரம்)
(வழி : விழுப்புரம், மயிலாடுதுறை, திருச்சி)
திருப்பதி - புதுச்சேரி (வாராந்திரம்)

### நீட்டிக்கப்படும் ரயில் சேவைகள்

மங்களூர் - திருச்சி எக்ஸ்பிரஸ் (புதுச்சேரி வரை)
பெங்களூரு - நாகூர் பயனிகள் ரயில் (காரைக்கால் வரை)

### புதிய ரயில் திட்டங்களுக்கு ஆய்வு

காரைக்கால் - பேரளம்

நமது வர்த்தக சபையின் 164-ஆம் ஆண்டு தொடக்க விழா புதுச்சேரி, புதுக்குப்பம் ஓட்டல் லே பாண்டியில் நடைபெற்றது. வர்த்தக சபை 13-02-1849-ம் ஆண்டு அன்றைய பிரெஞ்ச் அரசால் தொடங்கப்பெற்று தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக என்றும் நினைவில் இருக்கக்கூடிய வகையிலும் புதுச்சேரியின் தொழில், வணிக மேம்பாட்டுக்கு பயனளிக்க கூடிய வகையில் வர்த்தக மையம் கட்ட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

வர்த்தக சபையின் 2013 - 2016 ஆண்டுக்கான நிர்வாகக்குழுவைத் தேர்ந்தடுக்க தேர்தல் பேரவைக் கூட்ட அறிவிப்பு 04-03-2013 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. தேர்தல் அட்டவணைப்படி 11-03-2013 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் வர்த்தக சபை அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

12-03-2013 செவ்வாய்க்கிழமை முதல் 14-03-2013 வியாழக்கிழமை மாலை 4.30 மணிவரையில், வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனை / திருத்தம் இருப்பின் தெரிவிக்கும்படி கோரப்பட்டது. ஆனால் எவ்வித ஆட்சேபனை / திருத்தம் பற்றிய மனுக்கள் ஏதும் வரவில்லை.

எனவே, 15-03-2013 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் தகுதியுடைய வாக்காளர்களின் இறுதிப்பட்டியல் வர்த்தக சபை அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டது.

தவிர, 16-03-2013 சனிக்கிழமை காலை 11.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை 16 வேட்புமனுக்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி 16 பேரில் 3 வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகி கொண்ட காரணத்தால் மீதமுள்ள கீழ்கண்ட 13 வேட்பாளர்கள் போட்டியின்றி 01-04-2013 முதல் 31-03-2016 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு நிர்வாக குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அதிகார பூர்வமாக தேர்தல் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது. அவர்கள் பின்வருமாறு. கே.ஏ. செண்பகராஜன், ஜெ சேகர், ப. தணிகாசலம், எல்.பி. ரவி சு. குணசேகரன், மு. சிவசங்கர், டி.ஜி. ஆனந்தமுருகேசன், க. முகமது சிராஜ், ச. தண்டபாணி (எ) ராஜா, சு. சுதாகர், பொ. தேவகுமார், பொ. ஞானசம்பந்தம், ச. சுவாமிநாதன் பின்னர் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடி தங்களில் இருந்து ஐந்து நிர்வாகப்பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்தனர். அவர்கள் பின்வருமாறு. திரு. கே.ஏ. செண்பகராஜன், அவர்களை தலைவராகவும், திரு. ஜெ சேகர் அவர்களை துணைத் தலைவராகவும், திரு. ப. தணிகாசலம், அவர்களை பொதுச்செயலாளராகவும், திரு. எல்.பி. ரவி அவர்களை, இணைப்பொதுச்செயலாளராகவும், திரு. சு. குணசேகரன் அவர்களை பொருளாளராகவும் போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

வர்த்தக சபையின் 2013 - 2016 ஆண்டுக்கான நிர்வாகக்குழுவை தேர்ந்தெடுக்க தேர்தல் அதிகாரிகளாக தொழிலாளர் நல அதிகாரி (ஓய்வு) திரு. க. கலியபெருமாள் அவர்களும் நமது உறுப்பினர்கள் M/s. ஆண்டாள் மாடர்ன் ரைஸ் மில் உரிமையாளர் திரு. ஆ.சீ. ஆறுமுகம் அவர்களும் M/s. ஜெ. கே. ஆட்டோ மொபைல் நிறுவன பங்குதாரர் திரு. ப. ராதாகிருஷ்ணன் அவர்களும் சிறப்புடன் செயல்பட்டு சட்டப்படியாகவும் அமைதியாகவும் நடத்தி தந்தனர். அவர்களுக்கு வர்த்தக சபையின் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

### அன்பு வேண்டுகோள் !..

நமது செய்திவெளியீடுக்கு விளம்பரம், படைப்புகள், மற்றும் செய்திகள் அளிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அலுவலகச் செயலாளர், வர்த்தக சபை, புதுச்சேரி - 1 • 0413 - 2338615


MSH
SINCE 1961
SILK MARK
முதல் மாடியில்
திருமணத்திற்கான
பட்டு புடவைகளுக்கு
பிரத்தியேகமான பிரிவு
Fashionable Silk Sarees,
Ready-Mades &
All Kinds of Textiles
முத்து சில்க் ஹவுஸ்
MUTHU SILK HOUSE
( Near Raja Theatre Signal Only ) 314, J.N. Street, Pondicherry - 1.
Ph : 2334298, 2333541. Fax : 2222142

# நிகழ்வுகள்....




சமூக விரோதிகளால்
தாக்கப்பட்ட
M/s. அன்பு டிரேடர்ஸ்
நிறுவனத்தை
பார்வையிடல்



வர்த்தக சபை வரவேற்பு
அரங்கில் பழைய
மரத்தெராய்கள்
விலைப்புள்ளி
பிரித்தல் மற்றும்
ஏல நிகழ்ச்சி நடைபெற்றது.



வர்த்தக சபையில்
நடைபெற்ற குடியரசு தின
விழாவில் தலைவர் அவர்கள்
தேசியக்கொடி ஏற்றிவைத்தார்

# நிகழ்வுகள்....




நமது பொதுக்குழுக் கூட்டம் ஓட்டல் ஆனந்தா இன் கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்றது.



கடைகள் வணிக நிறுவனங்கள் பதிவு முகாமில் பதிவு செய்த வணிகர்களுக்கு பதிவு சான்றிதழை மாண்புமிகு. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்



மாண்புமிகு. மத்திய அமைச்சர் திரு. வே. நாராயணசாமி அவர்களை நேரில் சந்தித்து நமது கோரிக்கையினை ஏற்று புதிய ரயில் விட நடவடிக்கை எடுத்ததற்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

'வாட்' வரி உயர்வை
குறைக்கக் கோரி
மாண்புமிகு முதல்வர்
அவர்களை சந்தித்து
மனு அளித்தல்





2013 - 2016 ஆண்டுக்கான போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

எண். 1, சுய்ப்ரென் வீதி, புதுச்சேரி - 605 001.
தொலைபேசி : 2338615 • தொலை நகல் : 0413 - 2338615
**website : www.chambredecommerce.in - E-mail : pcc1849@gmail.com**

Publisher : K.A. SHENBAKARAJAN, PRESIDENT, CHAMBRE DE COMMERCE, No. 1, Rue Suffren, Puducherry - 605 001.
Printed at : MOTHER'S GRACE PRINTERS & GRAPHICS, No. 7, Sagayamatha Street, Muthiyalpet, Puducherry - 3.

*Introducing*

# HONDA

# EP 1000

Value for money Genset







**850 VA PORTABLE GENSET**

**Specifications**

| | | | |
|---|---|---|---|
| Frequency(Hz) | 50 | Fuel Tank Capacity (L) | 3.6 |
| Generation Method | 20 + pole revolving magnet field type | Continuous Operational Time (h) @ Rated Output | 6.7 |
| Rated Output Voltage(v) | 230 | Noise Level (dB(A)] Lwa | 85(@Rated Output) |
| Rated Output(VA) | 750 | Dimensions LengthxWidthXHeight(mm) | 404x352x431 |
| Maximum Output(VA) | 850 | Oil Alert | Yes |
| Engine Type | 4-Stroke . Single Cylinder, Inclined type of 25. over head valve | Decompression Mechanism | Yes |
| Displacement(Cm) | 79.7 | Fuel | Gasoline |
| Starting System | Recoll | Dry weogjt (Kgs.) | 27.4 |

* Total load of various appliances houldnot exceed the rated output. coditions apply.

HONDA
POWER PRODUCTS
Honda Siel Power Products Ltd.,

Authorised Dealer
**NAVANEETH & CO**
No. 12, Anna Salai, Puducherry - 605 001. Ph : 0413 - 2343162 / 2343165

Registrar of Newspaper for India, New Delhi Licence No. PONTAM00433/32/1/2012-TC

